செ.வெ.எண்:37 நாள்:11.10.2017

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் தூத்துக்குடி மாநகரில் ராஜீவ் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் மாப்பிள்ளையூரணி- ராஜீவ் காந்தி நகர் திட்டப்பகுதியில் 5.12 ஏக்கர் நிலப் பரப்பளவில் ரூ.29.15 கோடி செலவில் தரைதளம் மற்றும் இரண்டு அடுக்கு மேம்பாட்டில் 444 குடியிருப்புகளை காணொளிக்காட்சி மூலம் சென்னையில் இன்று (11.10.2017) திறந்து வைத்தார்கள்.

---

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம், தூத்துக்குடி மாநகரில் உள்ள ஓடை, சாலை ஓரங்கள் போன்ற ஆட்சேபகரமான பகுதிகளில் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி சுகாதாரமற்ற சூழ்நிலையில் குடிசைப்பகுதிகளில் வாழ்ந்து வரும் 444 குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய ராஜீவ் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் மாப்பிள்ளையூரணி- ராஜீவ் காந்தி நகர் திட்டப்பகுதியில் 5.12 ஏக்கர் நிலப் பரப்பளவில் ரூ.29.15 கோடி செலவில் தரைதளம் மற்றும் இரண்டு அடுக்கு மேம்பாட்டில் 444 குடியிருப்புகள் 37 கட்டட தொகுப்புகளாக, ஒரு வீடு தலா 341 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரிய வீடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், காணொளி காட்சி மூலம் சென்னையில் இன்று (11.10.2017) திறந்து வைத்தார்கள்.

ஒவ்வொரு குடியிருப்பிலும் பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை, பால்கனி, குளியலறை மற்றும் கழிவறை அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டப்பகுதியில் தார் சாலை, மழைநீர் வடிகால், கழிவுநீரகற்று வசதி, தண்ணீர் சேகரிக்கும் தொட்டி, பூங்கா, அங்கன்வாடி வசதிகள், மழைநீர் சேகரிக்கும் அமைப்பு, குப்பை சேகரிப்பு தொட்டி மற்றும் தெரு மின்விளக்குகள் போன்ற அனைத்து வசதிகளுடன் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது.

மாப்பிள்ளையூரணி- ராஜீவ் காந்தி நகரில், காணொளிகாட்சி மூலம் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்ச்சியில் மவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ்,இ.ஆ.ப., அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு.சி.த.செல்லப்பாண்டியன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.பி.டி.ஆர்.ராஜகோபால், மேற்பார்வை பொறியாளர் திரு.சேதுபதி, செயற்பொறியாளர் திரு.எஸ்.எட்வின் சாம், பயனாளிகள் திருமதி.பி.நீலவேணி, திருமதி.ஆர்.சுப்புலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். அதனைதொடர்ந்து திருமதி.பி.நீலவேணி என்ற பயனாளி அப்பகுதிமக்கள் சார்பில், குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டித்தந்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் உதவி செயற்பொறியாளர்கள் திரு.திரு.ஜி.ஜேம்ஸ் அசோக்குமார், திருமதி.ரீட்டா, உதவி பொறியாளர் திரு.சி.செல்லம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.